செய்தி வெளியீடு எண்: 277 நாள் : 09.06.2016

# தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க 09.06.2016 அன்று மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. உடுமலை கே. இராதாகிருஷ்ணன் அவர்கள் குடிசைப்பகுதி மாற்று வாரிய மாதாந்திர ஆய்வுக்கூட்டத்தை தலைமையேற்று வாரிய கூட்ட அரங்கில் நடத்தினார்கள். அக்கூட்டத்தில், குடிசைப்பகுதி மாற்று வாரிய செயல்பாடுகள், திட்டங்கள் மற்றும் தற்போதைய நிலை ஆகியவற்றை விரிவாக மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். ஆய்வின்போது தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் முக்கிய குறிக்கோளான குடிசை வாழ் மக்களின் மேம்பாட்டிற்கான அரசின் திட்டங்களை விரைந்து அமுல் படுத்தி, அனைத்து குடிசை வாழ் மக்களுக்கும் வீடு வழங்குவதை உறுதி செய்யுமாறும் திட்டங்களின் அமலாக்கத்தினை விரைவு படுத்துமாறும் குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் மற்றும் அலுவலர்களை, மாண்புமிகு அமைச்சர்அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி அரசின் அனைத்து நலத்திட்டங்களையும் மக்களுக்கு கொண்டு செல்லும் நோக்கத்தினை உறுதி செய்யவும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023–ன் படியான இலக்கினை அடைய மைய அரசின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் என்ற திட்டத்தின் மூலம் நிதி பெற நடவடிக்கை எடுக்கவும், தற்போது பணிகள் நடைபெற்றுவரும் வீடுகளின் கட்டுமான பணிகளை விரைந்து முடிக்கவும், கட்டிடங்களின் தரத்தினை உறுதி செய்திடவும், பழுது பார்த்தல் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கிடவும் அறிவுரைகள் வழங்கினார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் தலைவர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அவர்களும் திரு.இரா.பழனிசாமி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அவர்களும், பல்வேறு பிரிவுகளின் உயர் அதிகாரிகள் மற்றும் பொறியாளர்களும் பங்கேற்றனர்.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9